இணைப்பு

## பாடப்புத்தகத்தில் நீக்கப்பட்ட / சேர்க்கப்பட்ட வரிகள் – பாடப்பகுதிகளின் அட்டவணை - வகுப்பு வாரியாக

| வ.எண் | வகுப்பு / பருவம் | பாடம் / இயல் | பக்க எண் | பத்தி / வரிகள் | நீக்கப்படும் வரிகள் / பத்திகள் | சேர்க்கப்படும் வரிகள் / பத்திகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 7 ஆம் வகுப்பு / முதல் பருவம் | தமிழ் (முதல் பருவம்), இயல் மூன்று – தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | 59 | தெரிந்து தெளிவோம் பெட்டி செய்தி | 1936ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் விருதுநகரில் போட்டியிடப் பெருந்தலைவர் காமராசர் முன் வந்தார். நகராட்சிக்கு வரி செலுத்தியவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும் என்னும் நிலை இருந்தது. எனவே, முத்துராமலிங்கத் தேவர் ஓர் ஆட்டுக்குட்டியை வாங்கிக் காமராசர் பெயரில் வரி கட்டி அவரைத் தேர்தலில் போட்டியிட வைத்தார். | --- |
| 2 | 7 ஆம் வகுப்பு / முதல் பருவம் | சமூக அறிவியல் (புவியியல்) அலகு -3 மக்கள் தொகையும் குடியிருப்புகளும் | 210 | 3வது பத்தி / 2 மற்றும் 3வது வரிகள் | இந்திமொழி இந்தியாவின் ஆட்சிமொழியாக உள்ளது. | இந்தியாவின் அலுவல் மொழியாக இந்திமொழியும், இந்தி மொழி பேசப்படாத மாநிலங்களில் மாநில இணைப்பு மொழியாக ஆங்கிலமும் இருக்குமென இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. |

| வ.எண் | வகுப்பு / பருவம் | பாடம் / இயல் | பக்க எண் | பத்தி / வரிகள் | நீக்கப்படும் வரிகள் / பத்திகள் | சேர்க்கப்படும் வரிகள் / பத்திகள் |
|---|---|---|---|---|---|---|
| 3 | 7 ஆம் வகுப்பு / முதல் பருவம் | சமூக அறிவியல் (புவியியல்) அலகு-3 மக்கள்தொகையும் குடியிருப்புகளும் | 217 | வினா எண்: 3 | இந்தியாவின் ஆட்சிமொழி ____ஆகும்.<br>அ) மராத்தி<br>ஆ) தமிழ்<br>இ) ஆங்கிலம்<br>ஈ) இந்தி | --- |
| 4 | 8 ஆம் வகுப்பு / முதல் பருவம் | சமூகஅறிவியல் (வரலாறு)<br>4. மக்களின் புரட்சி | 194-195 | புரட்சியின் போக்கு என்ற தலைப்பின்கீழ் 2ஆம் பத்தி / 11 ஆம் வரி முதல் கடைசி வரை | ஆங்கிலேயர்கள் தங்களது நாட்டிற்கு சென்ற பிறகு இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியை நிறுவ வேண்டுமென எண்ணி முஸ்லிம் தலைவர்கள் மற்றும் முஸ்லிம் சமய அறிஞர்கள் புரட்சியில் கலந்து கொண்டனர். | --- |
| 5 | 9 | அறிவியல் (வேதியியல்)<br>15. கார்பனும் அவற்றின் சேர்மங்களும் | 178 | அட்டவணை **15.3** **(ஆங்கில வழியில் சரியாக உள்ளது)** | **இது வெப்பம் மற்றும் மின்சாரத்தைக் கடத்தாது.** | **இது வெப்பம் மற்றும் மின்சாரத்தைக் கடத்தும்.** |
| 6 | 10 | சமூக அறிவியல் (வரலாறு)<br>**5. 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்** | 84 | (ஆ) வைகுண்ட சுவாமிகள் தலைப்பின் கீழ் / 1 முதல் 4 வரிகள் | தென்னிந்தியாவின் தொடக்ககாலச் சமூகத்தின் போராளிகளில் ஒருவரான வைகுண்ட சுவாமிகள் (1809 – 1851) | **வைகுண்ட சுவாமிகள் (1833 – 1851) என்பதைச் சேர்க்க வேண்டும்** |

| வ.எண் | வகுப்பு / பருவம் | பாடம் / இயல் | பக்க எண் | பத்தி / வரிகள் | நீக்கப்படும் வரிகள் / பத்திகள் | சேர்க்கப்படும் வரிகள் / பத்திகள் |
|---|---|---|---|---|---|---|
| 7 | 10 | சமூக அறிவியல் (வரலாறு) 5. 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 84 | (ஆ) வைகுண்ட சுவாமிகள் தலைப்பின் கீழ் / 11 முதல் 18 வரிகள் | அவருடைய இயற்பெயர் முடிசூடும்பெருமாள். இப்பெயருக்கு உயர் சாதி இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அவரின் பெற்றோர் அவருடைய பெயரை முத்துக்குட்டி என மாற்றினார். முத்துக்குட்டிக்கு முறையான பள்ளிக்கல்வியைப் பெறும் வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனாலும் பல சமய நூல்கள் குறித்த புலமையை அவர் பெற்றிருந்தார். | --- |
| 8 | 10 | சமூக அறிவியல் (வரலாறு) 5. 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 84 | படம் | வைகுண்ட சுவாமிகள் படம் இடம் பெறுதல் கூடாது. | --- |
| 9 | 10 | சமூகஅறிவியல் (வரலாறு) 5. 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 85 | முதல் பத்தி / 1 முதல் 2 வரிகள் | திருச்செந்தூர் கோவிலுக்குச் சென்றிருந்த அவர் தெய்வீக அனுபவம் ஒன்றைப்பெற்றார். | --- |
| 10 | 10 | சமூக அறிவியல் (வரலாறு) 5. 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 85 | முதல் பத்தி / 10 ஆம் வரி | 1833 ஆம்ஆண்டு - என்பதை நீக்க வேண்டும் | --- |

| வ.எண் | வகுப்பு / பருவம் | பாடம் / இயல் | பக்க எண் | பத்தி / வரிகள் | நீக்கப்படும் வரிகள் / பத்திகள் | சேர்க்கப்படும் வரிகள் / பத்திகள் |
|---|---|---|---|---|---|---|
| 11 | 10 | சமூகஅறிவியல் (வரலாறு) 5. 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 85 | 4ஆம் பத்தி / 14 முதல் 16வது வரிகள் வரை | அவருடைய கருத்துகள் ஒரு நூலாகத் திரட்டப்பட்டுள்ளது. அந்நூலின் பெயர் அகிலத்திரட்டு என்பதாகும். | --- |
| 12 | 10 | சமூக அறிவியல் (குடிமையியல்) 3. மாநிலஅரசு | 220 | 3ஆம் பத்தி / 4 முதல் 9 வரிகள் வரை | இதேபோன்று கவுகாத்தியிலுள்ள உயர்நீதிமன்றம் ஏழு வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், நாகலாந்து, மணிப்பூர், மிசோரம், மேகாலயா, திரிபுரா மற்றும் அருணாச்சலப்பிரதேசம் போன்றவைகளுக்கு பொது நீதிமன்றமாக உள்ளது. | இதேபோன்று கவுகாத்தியிலுள்ள உயர்நீதிமன்றம் நான்கு வடகிழக்குமாநிலங்களான அஸ்ஸாம், அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு பொது உயர்நீதிமன்றமாக உள்ளது. இந்த உயர்நீதிமன்றத்தின் கிளைகள் இட்டாநகர், கொஹிமா மற்றும் அய்ஸ்வால் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. |
| 13 | 10 | சமூக அறிவியல் (பொருளியல்) 2. உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் | 244 | உபதலைப்பு ஆரம்பகால வர்த்தகர்கள் / 2 வது வரி | நவீன ஒரிசா என்பதை நீக்க வேண்டும் | தற்போதைய ஒடிசா எனச் சேர்க்க வேண்டும் |

| வ.எண் | வகுப்பு / பருவம் | பாடம் / இயல் | பக்க எண் | பத்தி / வரிகள் | நீக்கப்படும் வரிகள் / பத்திகள் | சேர்க்கப்படும் வரிகள் / பத்திகள் |
|---|---|---|---|---|---|---|
| 14 | 10 | சமூக அறிவியல் (பொருளியல்) 2. உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் | 244 | உபதலைப்பு ஆரம்பகால வர்த்தகர்கள் 6 முதல் 12வது வரிகள் வரை | மத்திய காலத்தில் தெற்கு இந்தியாவில் வர்த்தகர்களாக கத்ரிகாஸ், நாகராஸ், மும்முரிதந்தாஸ், அய்யாவோலி 500, செட்டீஸ், பிருடாஸ், கோவாராஸ் போன்ற பல வர்த்தககுழுவினர் செயல்பட்டனர். தொகராஸ், கோவாராஸ் போன்ற சில வர்த்தககுழுவினர் ஆலய வளாகத்தில் மட்டுமே சந்தித்து வர்த்தகத்தை மேற்கொண்டனர். | ------ |
| 15 | 11 | வரலாறு (தொகுதி 2) 19. நவீனத்தை நோக்கி | 176 | உபதலைப்பு | வைகுண்ட சுவாமிகள் **(1809-1851)** | வைகுண்ட சுவாமிகள் (1833-1851) |
| 16 | 11 | வரலாறு (தொகுதி -2) 19. நவீனத்தை நோக்கி | 176 | படம் | வைகுண்ட சுவாமிகள் படம் இடம் பெறுதல் கூடாது | --- |

| வ.எண் | வகுப்பு / பருவம் | பாடம் / இயல் | பக்க எண் | பத்தி / வரிகள் | நீக்கப்படும் வரிகள் / பத்திகள் | சேர்க்கப்படும் வரிகள் / பத்திகள் |
|---|---|---|---|---|---|---|
| 17 | 11 | வரலாறு (தொகுதி 2)<br>19. நவீனத்தை நோக்கி | 176 | 3ஆம் பத்தி முழுவதும் | ஸ்ரீவைகுண்ட சாமிகள் வழிபாடு 1830 களில் நிறுவப்பட்டு …….. விரைவில் அவரது புகழ் அனைத்து இடங்களுக்கும் பரவியது .<br>வரையுள்ள பத்தியை நீக்க வேண்டும் | ஸ்ரீவைகுண்டசாமிகள் வழிபாடு இன்றும் நடைமுறையில் உள்ளது. தென் திருவிதாங்கூரில் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம்) சாஸ்தா கோவில் விளை (தற்போது சாமித்தோப்பு என்றழைக்கப்படுகிறது) எனும் சிறிய ஊரில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்த வைகுண்ட சாமிகள் தனது குழந்தைப் பருவத்தில் கிராமத்திலிருந்த திண்ணைப் பள்ளியில் மதம் மற்றும் நீதி நூல்களைக் கற்றார். ஆறு ஆண்டுகள் துறவற வாழ்வை மேற்கொண்டார். விரைவில் அவரது புகழ் அனைத்து இடங்களுக்கும் பரவியது. - எனச் சேர்க்க வேண்டும் |
| 18 | 11 | வரலாறு (தொகுதி 2)<br>19. நவீனத்தை நோக்கி | 176 | 4வது பத்தி / 7ஆம் வரி | 1838 இல் என்பதை நீக்கவேண்டும் | பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்ட போது ஒடுக்கப்பட்ட மக்களிடையே மிகவும் பிரபலமானார்.<br>(பின்னர் என்ற சொல்லை மட்டும் சேர்க்க வேண்டும்) |

| வ.எண் | வகுப்பு / பருவம் | பாடம் / இயல் | பக்க எண் | பத்தி / வரிகள் | நீக்கப்படும் வரிகள் / பத்திகள் | சேர்க்கப்படும் வரிகள் / பத்திகள் |
|---|---|---|---|---|---|---|
| 19 | 11 | வரலாறு (தொகுதி 2)<br>19. நவீனத்தை நோக்கி | 176 | 4வது பத்தி / 10 மற்றும் 12 ஆம் வரி | அவருடைய சீடர்கள் அவரை ஐயா (தந்தை) என்று அழைக்கலாயினர். அவரைப் பின்பற்றிய நடைமுறைகள் ”ஐயாவழி” என்றழைக்கப்பட்டது. அவருடைய போதனைகள் தொகுக்கப்பட்டு ‘அகிலத்திரட்டு’ என்னும் வழிபாட்டு நூலாக வெளிவந்தது. | அவருடைய சீடர்கள் அவரை அய்யா (தந்தை) என்று அழைக்கலாயினர். அவரைப் பின்பற்றிய நடைமுறைகள் ”அய்யாவழி” என்றழைக்கப்படுகிறது. |